**வத்தளை மாபோல நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வத்தளை மாபோல நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள வத்தளை மாபோல நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் விரிவான முகாமைத்துவ அறிக்கையில் பின்வரும் இலக்கங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.2.1)(ஆ), (இ),(ஈ)), ,(உ), 1..2.2, 1.2.3, 1.2.4 හා 1.2.5

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 18.7 மற்றும் LGD/10A/4/ந.கி/2019 ஆம் இலக்க உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலக்கம் 7.7 இன் பிரகாரம் சபை குத்தகை வாடகை தவணை அடிப்படையின் கீழ் பெற்ற TOYOTA HILUX 4WD டபள் கெப் வண்டி ரூபா 9,690,000 பெறுமதி மற்றும் ரூபா 3,255,480 வட்டி என்பன நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்த துடன் அந்த பெறுமானத்தேய்வில் ஆண்டின் மிகை 387,600 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. இதற்காக 2017 ஆம் ஆண்டில் கையிலுளள் காசில் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட 9,000,000 கடன்கொடுத்தோரில் சரிசெய்யப்படாமையால் அந்த அளவினால் கடன்கொடுத்தோரும் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பழைய கணக்கு முறைமையில் கொள்வனவு செய்யப்பட்ட இந்த வாகனம் கணக்கீடு செய்யப்பட வேண்டிய முறை குறிப்பிடப்படாதிருந்த மையால் நிலையான சொத்தாக பதியப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (இ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தை பின்பற்றுதல் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் EG 3.1 இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நிர்மாணங்களுக்கான ரூபா 8,388,624 பெறுமதி நடைமுறை வேலையாக காண்பிக்கப்படாமல் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 இன் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஈ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம ஏற்பாடுகள் மற்றும் வழிகாட்டலின் கீழ் EG 3.1 இன் பிரகாரம் கடன்கொடுத்தோராக மற்றும் சொத்துக் கணக்குகளில் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 12,794,690 பெறுமதி நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது நடைமுறை வேலைகளை தனியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கை இலக்கம் 3.3 இன் கீழ் கணனிகளுக்காக 15 சதவீதம் மற்றும் கணனி மென்பொருளுக்காக 12.5 சதவீதம் ஆக பெறுமானத் தேய்வு வீதம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் கணனி மற்றும் கணனி மென்பொருளுக்குரிய சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | மென்பொருள்கள் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் பெறுமானத்தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2020 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான ஆரம்ப மீதியை கணக்கீடு செய்வதற்காக நாட்குறிப்பு பதிவுகள் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதும், 05 கணக்கு விடயங்களில் மாற்றமடைந்த மீதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையினால் முன்னர் காணப்படாத இருப்புக்கள் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 53,119,273 ஆரம்ப மீதியொன்று காணப்பட்டது. | எதிர்காலத்தின் போது இந்த வழுக்களை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ள சரியான மீதி முன்கொண்டு வரப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் நானாவித கடன்கொடுத்தோர் கணக்கில் ரூபா 68,018,760 நிதியேற்பாடு செய்யப்பட்ட போதிலும், உடன்படிக்கை செய்யப்படாத வேலைகளின் பெறுமதி ரூபா 22,853,253 கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 22,853,253 இனால் கடன்கொடுத்தோர் மற்றும் (கட்டிடம்) சொத்துக்கள் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இதன் ஆலோசனை சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | உடன்படிக்கை செய்யப்பட்ட வேலைகளுக்காக மாத்திரம் நிதியேற்பாடு ஏற்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனங்கள் மாற்றங்கள் கூற்றில் | 2019 ஆம் ஆண்டினதும், 2020 ஆம் ஆண்டினதும் இறுதிக் கணக்குகள் தயாரித்த முறைமை | முன்னைய ஆண்டின் சரியான பெறுமதி கணக்குகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | 2019 ஆம் ஆண்டிற்கான விரிவான வருமானம் ரூபா 41,246,039 ஆக காண்பிக்கப்பட்ட போதும், 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளின் பிரகாரம் மிகை ரூபா 24,272,602 ஆனமையால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய சொத்துக்கள் ரூபா 16,973,437 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இரண்டாக இருந்தமையால் அந்த இலக்கங்களை ஒப்பீடு செய்வதில் வசதியீனமாக இருந்ததை அறியத்தருகின்றோம். | கொண்டு வருதல் வேண்டும். |
| (ஈ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 9.9 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மூலதன செலவினங்கள் மானிய பெறுவனவுகளில் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள், மிகைகள் இனங்காணப்பட்ட மானியமாக கழித்து சேமிப்பு தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தின் கீழான மிகையில் இனங்காணப்படாத மானியத்தின் கீழ் பதியப்படல் வேண்டும். எனினும், பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்ட அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் வருமான செலவினமாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறின்றி கிடைத்த நிதியேற்பாடுகளில் இருந்து மீளாய்வாண்டில் செலவு செய்திருந்த போதிலும், கிடைத்த/ கிடைக்க வேண்டிய மொத்தம் ரூபா 6,485,468 நிதியேற்பாட்டுத் தொகையும் தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு செய்யதல் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் அல்லாமல் அடுத்துவரும் ஆண்டில் ஆனமையால் பெறுமானத் தேய்விற்கான செலவினங்கள் சொத்துக்கள் இனங்காணப்பட்ட ஆண்டின் பின்னரான ஆண்டிலேயே இனங்காணப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்குகள் வைக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 102,519,308 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 45,215,921 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 416 வியாபார நிலையங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய கழிவுப் பொருள் அகற்றும் கட்டண நிலுவை மீதி ரூபா 9,388,098 ஆக இருந்ததுடன் 2021 மார்ச் வரையிலும் அதில் ரூபா 320,650 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை ரூபா 320,650 நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் 1973 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 09 ஏக்கர் 20 பேர்ச் அளவான காணி தொடர்பாக அரச கணக்குகள் குழுவினால் 2019 நவம்பர் 07 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த கட்டளையின் பிரகாரம் நில அளவையாளர் நாயகத்தினால் 28 கூறுகளின் உப பிரிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 03 கூறுகளில் மேலதிகமாக உரிமை கோரப்படுகின்ற அளவு 24.33 பேர்ச் ஆக இருந்ததுடன் நகர சபைக் கட்டிடத்திற்குரிய காணி பகுயில் குறைத்து உரிமை கோருகின்ற அளவு 2.34 பேர்ச் ஆகும். நீண்ட கால ரீதியில் வாடகை அடிப்படையிலோ அல்லது உரித்து மாற்றப்பட்ட காணியின் உரிமையாளர் அறிக்கைகளில் சுட்டிக்காட்டாதிருந்தமையால் ஆதனவரி இலக்கத்துடன் உரித்து | உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் பொறியியலாளர் மூலம் இது தொடர்பாக பரிசோதனையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் முறையான பிரகாரம் உரித்தை உறுதிப்படுத்தியதன் பின்னர் தகவல்கள் அறிக்கையிட முடியுமென அறியத்தருகின்றோம். | உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கோருகின்ற அளவு 01 ஏக்கர், 02 றூட், 39.13 பேர்ச் ஆன 12 கூறுகளாக இருந்ததுடன் கூறிடல்களின் பிரகாரம் ஆதனவரி பதிவேடுகளில் உள்ளடக்கப்படாத 01.43 பேர்ச் அளவான 03 காணிக் கூறுகள் மற்றும் தற்போது கண்டறிய முடியாதுள்ள 02.41 பேர்ச் அளவான 02 காணிக் கூறுகள் ஆகும். அதன் பிரகாரம் சபைக்குச் சொந்தமான காணி உரித்தற்ற வகையில் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டமை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மில்கோ ஒக்சிசன் கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட காணி 2020 செப்தெம்பர் --- ஆந் திகதி அவதானித்தபோது அதில் சபைக்குச் சொந்தமான காணியொன்றில் அறிவித்தல் பதாதையொன்று பொருத்தப்பட்டிருந்தது. அந்தக் காணியை சுற்றி மதில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் கம்பனியினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் அகற்றப்படாமையால் மதிலின் மிகுதிப் பகுதி பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. உரித்து இழக்கப்பட்டமையால் நட்டம் ஒன்று ஏற்பட்டதாக குறிப்பிட்டு சபைக்கும், தலைவருக்கும் மற்றும் செயலாளருக்கும் எதிராக ரூபா 500 இலட்சம் இழப்பீட்டுடன் வருடாந்தம் 12 சதவீத வட்டியை கோரி வழக்கு தொடருவதாக காண்பித்து அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்ததுடன் எனினும் இந்தக் காணியை அவருக்கு சொந்தமாக்கி கொள்ளும் முயற்சியிலிருந்து விலகாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | உள்ளூராட்சி திணைக்களத்தின் சட்டப் பிரிவிற்கு 2020 திசெம்பர் 09 ஆந் திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்த போதிலும் இதுவரை பதில் கிடைக்காமையால் பதில் கிடைத்த பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | விடுவித்தல் உரித்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வரி இலக்கம் 733, 259 மற்றும் 294 இன் கீழ் முறையே 30.4 பேர்ச், 01 ஏக்கர் 01 றூட் 36.89 பேர்ச் மற்றும் 0.54 பேர்ச் அளவு 30 வருட காலத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள 03 காணிகளுக்காக 05 வருடங்களுக்கு ஒரு தடவை வாடகைப் பணம் மதிப்பீடு செய்யப்பட்டு திருத்தப்படாமையால் சபையின் காணிகள் நீண்டகால ரீதியில் உரித்து நீக்கப்பட்டமையினால் சபைக்கு கணிசமான பாதிப்பொன்று ஏற்பட்டிருந்ததுடன் இந்த காணியின் உரித்தினை வாடகையாளர்களுக்கு வழங்குவதற்காக திட்டமிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் வாடகைக்கு வழங்குதலின் போது முறையாக கேள்வி நடைமுறைகளை பின்பற்றி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 1986/6 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கேள்வி நடைமுறைகள் அல்லது 05 வருடங்களுக்கு ஒரு தடவை வாடகைப் பணம் திருத்தப்பட வேண்டியமைக்கான ஏற்பாடுகள் காணப்படாதிருந்தமையை அறியத்தருகின்றோம். | நீண்ட காலத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை வாடகைப் பணம் மதிப்பீடு செய்யப்பட்டு திருத்துவதற்கு உடன்படிக்கை மூலம் ஏற்பாடுகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | வாடகையாளரினால் தனாகத் ஹெந்தல சந்தி வியாபாரத் தொகுதியில் இலக்கம் 05 பன்றி இறைச்சி விற்பனைக் கடை அமைந்துள்ள நிலம் ஒரு வருடத்திற்காக ரூபா 2,500 மாதாந்த வாடகையிலும் 06 மாதங்கள் பண வைப்புச் செய்வதன் கீழ் எந்தவித உடன்படிக்கையுமின்றி 2012 ஒக்தோபர் 17 ஆந் திகதி வழங்கப்பட்டு அத்திகதி முதல் வியாபார நடவடிக்கைகள் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் பின்னர் இந்தக் கடை வாடகைக்கு வழங்கிய முறை தொடர்பாக அறிக்கையிடப்படாதிருந்த துடன் 2021 ஆம் ஆண்டிற்காக கடை | கேள்வி நடைமுறைகளுக்கு முரணாக சபையினால் எடுக்கப்பட்டுள்ள இந்த தீர்மானத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் ஆலோசனை கோரப்பட்டள்ளது என அறியத்தருகின்றோம். | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

உரிமையாளர் உரித்தாக்கிய கடையாக கூறி கேள்வி கோரலின்றி பெறப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்குவதற்கு 2020 நவம்பர் 30 ஆந் திகதி மாதாந்த சபைக் கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்தது.
இந்த விற்பனைக் கடை தொடர்ச்சியாக உடன்படிக்கை மற்றும் அரசாங்க மதிப்பீடு இன்றி கேள்வி நடைமுறைகளுக்கு புறம்பாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இதில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 167,750 ஆகும்.

## 3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குடாஏதண்ட சனசமூக மண்டத்தின் நிர்மாணத்தின் I ஆம் கட்டத்திற்காக ரூபா 1,999,837 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,994,518 தொகையில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 2019 யூன் 25 ஆந் திகதி 04 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இதன் II ஆவது கட்டத்திற்காக 2020 யூன் 25 ஆந் திகதி 05 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு ரூபா 988,486 தொகையில் மீண்டும் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் இறுதிக் கட்டமாக ரூபா 989,550 தொகையில் இந்த ஒப்பந்தகாரருடன் 2020 செப்தெம்பர் 18 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. கட்டம் 3 இற்காக ரூபா 3,994,518 தொகையொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 மே 24 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் LGD/04/2007 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் | இதன் இலக்கம் கட்டம் 1 செயற்திட்டம் ரூபா 20 இலட்சத்திற்கு குறைவாக இருந்தமையால் சபையின் வேலை அத்தியட்சகர் அங்கீகரித்தல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் மிகுதி மதிப்பீடு 02 உம் ரூபா 10 இலட்சம் ஆக இருந்தமையால் வேலை அத்தியட்சகர் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததென அறியத்தருகின்றோம். | பல கட்டங்களை உடைய செயற் திட்டத்திற்காக மொத்த மதிப்பீட்டிற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

மொத்த மதிப்பீட்டிற்காக வழங்கப்படக் கூடிய உள்ளூராட்சி பொறியியலாளர் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. உரிய கடிதத்தின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் மதிப்பீடு தயாரித்த உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தாதிருந்த போதிலும் அவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக சபை அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.